# நகராட்சி நிர்வாகத்துறையில் அடுக்கடுக்கான திட்டங்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

மேலும், அரசாணை (நிலை) எண்.305, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.21.06.2023ன் படி தாம்பரம், ஆவடி மற்றும் கடலூர் மாநகராட்சி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் கூடுவாஞ்சேரி, பூந்தமல்லி, பொன்னேரி மற்றும் திருவேற்காடு நகராட்சிகளில் 69.56 கி.மீ நீளத்திற்கு ரூ.145.24 கோடி மதிப்பீட்டில் 53 மழைநீர் வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட சங்கரப்பேரி, பண்டாரம்பட்டி, மீளவிட்டான், தூத்துக்குடி புறநகர் மற்றும் முத்தையாபுரம் போன்ற பகுதிகள் வடகிழக்கு பருவ மழையின்போது ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் மழைநீர் சூழ்ந்து பாதிப்புக்குள்ளாகியது.

மேற்படி சூழ்நிலை இனி வருங்காலங்களில் ஏற்படாமல் தடுக்கும் வண்ணம், மழைநீர் வடிகால் அமைத்து மழை வெள்ளத்தினைத் தவிர்க்கும் வண்ணம் திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியானது நான்கு தொகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் முதல்கட்டப் பணியானது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.230.90 கோடி மதிப்பீட்டில் 25.386 கி.மீ நீளத்திற்கும், இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட பணிகள் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.122.86 கோடி மதிப்பீட்டில் 56.359 கி.மீ நீளத்திற்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022- 2023ம் திட்டத்தின் கீழ் ரூ.42.55 கோடி மதிப்பீட்டில் 43.094 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர, ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி தொகுதி 4ல் முதற்கட்டமாக நான்கு சிப்பங்களாக ரூ.82.98 கோடி மதிப்பீட்டில் 36.367 கி.மீ நீளத்திற்கும், மாநில பேரிடர் தடுப்பு நிதி 2023-24ன் கீழ் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் 3.700 கி.மீ நீளத்திற்கும் மழைநீர் வடிகால் அமைக்க பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**நகர்ப்புற நலிந்தோர் நலன்!**

நகர்ப்புறத்தில் வாழும் தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரக் கூறுகள் மற்றும் நகர்ப்புறத்தின் வீடற்றோருக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய 142 தங்கும் விடுதிகள்

**மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்ட முக்கிய திட்டங்கள்:**

3 ஆண்டுகளில் ரூ.8,672 கோடி மதிப்பீட்டில் 13,387 கி.மீ. நீள சாலைப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 1,261 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு 2513 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.12.72 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.

கொசஸ்தலை ஆறு மற்றும் சென்னையைச் சுற்றி நடைபெறும் பணிகள் உட்பட ரூ.6,778 கோடி மதிப்பீட்டில் 2,641 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டும், மேலும், 669 கி.மீ. நீளப் பணிகள் நடைபெறுகின்றன.

8,911 கோடி மதிப்பீட்டில் 28 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

858 கோடி மதிப்பீட்டில் 7.42 இலட்சம் தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிகள் நடைபெறுகின்றன.

1,200 கோடி மதிப்பீட்டில் 55 பேருந்து நிலையப் பணிகள் முடிவுற்றுள்ள நிலையில் 100 பேருந்து நிலையப் பணிகள் நடைபெறுகின்றன.

690 கோடி மதிப்பீட்டில் 62 சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

86 இடங்களில் சந்தைகள் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

100 அறிவுசார் மையங்கள் நகராட்சி மாநகராட்சியால் தொடங்கப் பட்டுள்ளன.

ரூ.198 கோடி மதிப்பீட்டில் 79 அறிவுசார் மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும், 21 அறிவுசார் மையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

ரூ.424 கோடி மதிப்பீட்டில் 681 பூங்கா அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் 396 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.700 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு, கரைகளைப் பலப்படுத்திச் சீரமைக்கப்பட்டுள்ளன.

ரூ.373 கோடி மதிப்பீட்டில் புதிய மின் மயானங்கள் நிறுவும் பணிகளும் நவீனப்படுத்தும் பணிகளும் நடைபெறுகின்றன.

ரூ.153 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.771 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.316 கோடி மதிப்பீட்டில் பயோமைனிங் மூலம் தேக்கத் திடக்கழிவுகளை அகற்றி, நிலத்தினை மீட்டெடுக்கும் பணி பல்வேறு நகரங்களில் முடிவுறும் நிலையில் உள்ளன. அவற்றின் மூலம் ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு நிழல்தரும் மரங்கள் நடப்பட உள்ளன.

திறந்த வெளியில் மலம் கழித்தலை அகற்றிட ரூ.152 கோடி மதிப்பீட்டில் 72,214 தனி நபர் கழிவறைகளும் 2,081 சமுதாயக் கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

ரூ.500 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

**புதிய நியமனங்கள்!**

கடந்த மூன்றாண்டு காலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுகளில் உள்ள பணியிடங்களான இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர்,பணி ஆய்வர், பதிவறை எழுத்தர், செயல்திறனற்ற உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆக மொத்தம் 1405 பேருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகளை உருவாக்கிட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாளர் பற்றாக் குறையைப் போக்கிட 2,500 பேரைத் தேர்வு செய்து நியமனம் செய்யலாம் என உத்தரவிட்டார்கள்.

அதன்படி, 2,500 பேரை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தேர்வு வைத்து யார் அதிக மதிப்பெண் பெறுகிறார்களோ, அவர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்ளலாம் என உத்தரவிட்டு; அதன்படித் தேர்வுகள் நடைபெற்றுள்ளன. தேர்வுத் தாள்களை மதிப்பிடும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் 2,500 பேருடன் மேலும் 3,000 பேரும் தேர்வு செய்யப்பட்டு நகராட்சிகளில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

**விருதுகளால் பாராட்டப்படும் தமிழ்நாடு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகரங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்கு முன்னுரிமை யளித்து வருகிறார்கள்.

இதன் காரணமாக, தூய்மை கணக்கெடுப்பு மாநில தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு 22வது இடத்தில் இருந்து தற்போது 2023ஆம் ஆண்டிற்கான தரவரிசை பட்டியலில் 10வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

மேலும் ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் தரவரிசையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளது. ஒரு லட்சத்திற்கு குறைவான நகரங்களின் தரவரிசை பட்டியலில் மாநில அளவில் மறைமலைநகர் நகராட்சி முதலிடம் பெற்றுள்ளது. தெற்கு மண்டலத்தை சார்ந்த மாநிலங்களில் உள்ள நகரங்களில் 15,000க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் தரவரிசை பட்டியலில் கீழ்வேலூர் பேரூராட்சி முதலிடம் பிடித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், புதுமையான திட்டங்களினால் பல்வேறு பெருமைகளைப் பெற்று நகராட்சி நிர்வாகத்துறையின் பணிகளால் நகரமயமாக்கலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது எனின் அதுமிகையல்ல!



தூத்துக்குடி ஜின் பேக்டரி ரோட்டில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கையடக்க கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, 46 ஆசிரியர்களுக்குக் கையடக்க கணினி வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் ரெஜினா, வட்டார கல்வி அலுவலர் சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## குற்றவியல் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஜூலை 11–

இந்தியாவில் நடைமுறையில் இருந்துவந்த மூன்று குற்றவியல் சட்டங்கள் மாற்றப்பட்டு, புதிய குற்றவியல் சட்டங்கள் கடந்த 1ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன. புதிய குற்றவியல் சட்டங்களால் பல குழப்பங்களும் பாதிப்புகளும் ஏற்படும் என குற்றம் சாட்டி, வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கோவையில் ரயில் நிலையத்தை முற்றுகை யிட்டு வழக்கறிஞர்கள் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை, திரும்ப பெற வலியுறுத்தி முழக்கங் களை அப்போது அவர்கள் எழுப்பினர்.

இதே போல், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் பேரணியாக சென்ற வழக்கறிஞர்கள், மன்னார்குடியில் இருந்து மயிலாடுதுறை செல்லும் பயணிகள் ரயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒன்றிய அரசை கண்டித்து முழக்கங்களையும் அப்போது அவர்கள் எழுப்பினர்.. இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர்

## கே.பாலகிருஷ்ணன் சகோதரர் கே.ராதாகிருஷ்ணன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜூலை 11–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அவர்களின் இளைய சகோதரர் கே.இராதாகிருஷ்ணன் (வயது 66), சிதம்பரம் அருகே அண்ணாமலை நகர் பேரூராட்சிக்குட்பட்ட திடல் வெளி பகுதியில் வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் (9.7.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

அன்னார் மறைவுற்ற செய்தியறிந்து அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தி வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலகிருஷ்ணன் அவர்களது சகோதரர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து, தோழர் பாலகிருஷ்ணன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

ராதாகிருஷ்ணன் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - நண்பர்கள் என அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் 101வது தொடர் நிகழ்ச்சி - 7431 நபர்கள் பயன்!

### கழக நிர்வாகிகளுக்கு சு.சுப்பிரமணியன் நன்றி!

நெல்லை.ஜூலை.11.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக வெகு சிறப்பாக நடைபெற்றது.அதாவது கடந்த 03.06.2024 முதல் 08.07.2024 வரை சுமார் 35 நாட்கள் தொடர் 100 நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. இதன் மூலம் 7431 நபர்கள் பலன் அடைந்துள்ளனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் 101 பிறந்த நாள் நிகழ்வு தொடர் 101 நிகழ்வாக நடைபெற்றுள்ளது. நிகழ்வுகள் அனைத்தும் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கழக நிர்வாகிகள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

அதில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் விவரம் வருமாறு.

3 மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் மற்றும் 3 சக்கர சைக்கிள்,13 இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 நபர்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.44 ஆதரவற்றோர் இல்லத்தில் 1320 நபர்களுக்கு காலை, மதியம்,இரவு என மூன்று வேளை உணவும்.

மேலும் மறைவெய்திய மாநகர முன்னாள் அவை தலைவர் டாக்டர். பொன்மணி,15 வது வட்ட முன்னாள் செயலாளர்கள் முருகன், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோட்டையப்பன், முன்னாள் வட்ட அவைத்தலைவர் கண்ணன், நெல்லை கழக மூத்த முன்னோடி குட்டி என்ற வேலாயுதம்,மாநகர முன்னாள் அவை தலைவர் வேலு என்ற சுப்பையா, ஆகியோர்களின் நினைவாக 7 இடங்களில் கழக கொடி கம்பம் ஏற்றப்பட்டுள்ளது.நெல்லை மாநகர 4 பகுதிகளில் 800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள், நெல்லை பேட்டை பகுதி 18 வது வார்டு நரிக்குறவர் காலனியில் உள்ள 7 ஏழை குடும்பங்களுக்கு ரூபாய் 1.50 லட்சம் மதிப்பில் தற்காலிக வீடுகள்.

நெல்லை மாநகரப் பகுதியில் உள்ள 7 பள்ளிகளில் பயிலும் 1400 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகள்.நெல்லையப்பர் கோவில் உள்பட 5 கோவில்களில் 800 பக்தர்களுக்கு அன்னதானம். நெல்லை மாநகரப் பகுதியில் 101 மரக்கன்றுகள். 2 இடங்களில் இலவச மருத்துவ முகாம்கள் மூலம் 400 நபர்கள் பலன் அடைந்துள்ளனர்.முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவ படம் பதித்த மாஸ்க் அணிந்து டவுனில் உள்ள நான்கு ரதவீதியில் 1000,க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புகள். தச்சநல்லூரில் உள்ள அம்மா உணவகத்தில் உணவு வழங்கியதில் 600 நபர்கள் பலன் அடைந்துள்ளனர். ஆக மொத்தம் தொடர் 100 நிகழ்வுகள் மூலம் 7431 நபர்கள் பலன் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தொடர் 100 நிகழ்வுகளை வெகு சிறப்பாக வழி நடத்திய தச்சநல்லூர் பகுதி துணை செயலாளர் ஸ்டார் முருகன்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான், மாநகர பிரதிநிதி சிவா, மாநகர சிறுபான்மை அணி சார்லஸ் முத்துராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் முருகன்,மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக், மாநகர தொழிலாளர் அணி தலைவர் சங்கர் கணேஷ் மற்றும் தொடர் 100 நிகழ்ச்சிகளி லும் கலந்து கொண்ட மாநகரக் கழக நிர்வாகிகள், மாநகர மகளிர் அணி நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள்,மாநகர சார்பு அணி நிர்வாகிகள், கழக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சொந்தங்கள் அனைவருக்கும் பாராட்டுதலையும்,நன்றியையும் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.



விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் தனது குடும்பத்துடன் அன்னியூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வாக்களித்தார்.

விருதுநகர் மாவட்டம் – சிவகாசி – காளையார்குறிச்சி – தனியார்

## பட்டாசு ஆலையில் விபத்து : உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை , ஜூலை 11-**

**விருதுநகர் மாவட்டம், சிவகாசி, காளையார்குறிச்சி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (09-07-2024) காலை 09.15 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெள்ளூர், சிதம்பராபுரத்தைச் சேர்ந்த மாரியப்பன் (வயது 45) (த/பெ.பெருமாள்) மற்றும் முத்துமுருகன் (வயது 45) (த/பெ.பரமசிவம்) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் எம். புதுப்பட்டியைச் சேர்ந்த சங்கரவேல் (வயது 52) (த/பெ.கூடலிங்கம்) மற்றும் திருமதி.சரோஜா (வயது 50) (க/பெ. கொடக்காரசின்னு) ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.